# முதல் திருப்புதல் பொதுத் தேர்வு-2020

## பன்னிரெண்டாம் வகுப்பு

Reg.No

நேரம்: 3.00 மணி

## வரலாறு

மதிப்பெண்கள்: 90

### பகுதி - I

20 x 1 = 20

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:

1. இந்தியாவின் முதுபெரும் மனிதர் என அழைக்கப்படுபவர்
   a) பாலகங்காதர திலகர் b) M.K.காந்தி
   c) தாதாபாய் நௌரோஜி d) சுபாஷ் சந்திரபோஸ்
2. சூரத்தில் நடைபெறவிருந்த காங்கிரஸ் மாநாட்டிற்கு காங்கிரசின் அடுத்த தலைவராக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு யாருடைய பெயர் தீவிர தேசியவாதிகளால் முன்மொழியப்பட்டது?
   a) அரவிந்த கோஷ் b) தாதாபாய் நௌரோஜி
   c) ஃபெரோஸ் ஷாமேத்தா d) லாலா லஜபதி ராய்
3. சுப்ரமணிய பாரதி குறித்த பின்வரும் எந்த கூற்று தவறானது?
   a) பாரதி சுதேசிமித்திரன் இதழின் துணை ஆசிரியராக இருந்தவர்
   b) பாரதி திலகரின் Tenets of New Party என்ற நூலை தமிழில் மொழிபெயர்த்தவர்
   c) பாரதியின் குருமணி (ஆசிரியர்) சுவாமி விவேகானந்தராவார்
   d) பாரதி பெண்களுக்கான சக்ரவர்த்தினி என்ற இதழின் ஆசிரியராக இருந்தவர்.
4. பனாரஸ் இந்துப் பல்கலைக்கழகம் யாரால் நிறுவப்பட்டது?
   a) மகாத்மா காந்தியடிகள் b) மதன் மோகன் மாளவியா
   c) திலகர் d) பி.பி. வாடியா
5. தென்னாப்பிரிக்காவிலிருந்து திரும்பிய காந்தியடிகள் தனது வெற்றிகரமான முதலாவது சத்தியாகிரகப் போராட்டத்தைத் தொடங்கிய இடம்
   a) கேதா b) தண்டி c) சம்பரான் d) பர்தோலி
6. பின்வருவனவற்றைப் பொருத்துக:

| | | |
|---|---|---|
| a) கான்பூர் சதி வழக்கு | - | 1) அடிப்படை உரிமைகள் |
| b) மீரட் சதி வழக்கு | - | 2) சூரியா சென் |
| c) சிட்டகாங் ஆயுத கிடங்கு கொள்கை | - | 3) 1929 |
| d) இந்திய தேசிய காங்கிரசின் கராச்சி மாநாடு | - | 4) 1924 |

   a) 1,2,3,4 b) 2,3,4,1 c) 3,4,1,2 d) 4,3,2,1
7. கீழ்க்காண்பவர்களில் 64 நாட்கள் உண்ணாவிரதத்திற்குப் பிறகு சிறையில் உயிரிழந்தவர் யார்?
   a) புலிதாஸ் b) சச்சின் சன் யால் c) ஜதீந்திரநாத் தாஸ் d) பிரித்தி வதேதார்
8. பின்வருவனவற்றைப் பொருத்தி சரியான விடையைத் தேர்வு செய்க:

| பட்டியல் I | | பட்டியல் II |
|---|---|---|
| A) அன்னிபெசண்ட் | - | 1. அலிகார் இயக்கம் |
| B) சையது அகமதுகான் | - | 2. தயானந்த சரஸ்வதி |
| C) கிலாபத் இயக்கம் | - | 3. பிரம்ம ஞான சபை |
| D) சுத்தி இயக்கம் | - | 4. அலி சகோதரர்கள் |

   a) 3,1,4,2 b) 1,2,3,4 c) 4,3,2,1 d) 2,3,4,1
9. பின்வரும் கூற்றுகளில் இருந்து சரியானவற்றைத் தேர்வு செய்க.
   i) அலிகார் இயக்கத்தை தோற்றுவித்த சர் சையது அகமது கான் தொடக்கத்தில் காங்கிரசை ஆதரித்தார்.
   ii) 1909 இல் தோற்றுவிக்கப்பட்ட பஞ்சாப் இந்து சபையானது இந்த மத வகுப்புவாத அரசியலுக்கு அடித்தளமிட்டது.
   a) கூற்று (i) மற்றும் (ii) சரி b) கூற்று (i) சரி (ii) தவறு
   c) கூற்று (i) தவறு (ii) சரி d) கூற்று (i) மற்றும் (ii) தவறு

10. தனி நபர் சத்தியாகிரகம் எப்போது தொடங்கியது?
a) மார்ச் 23 1940
b) ஆகஸ்ட் 8 1940
c) அக்டோபர் 17 1940
d) ஆகஸ்ட் 9 1942

11. பின்வருவனவற்றைப் பொருத்தி சரியான விடையைத் தேர்வு செய்க:
A) ஜேவிபி குழு - 1. 1928
B) சர்ச்சில் ராட்கிளிப் - 2. மாநில மறுசீரமைப்பு ஆணையம்
C) பசல் அலி - 3. 1948
D) நேரு குழு அறிக்கை - 4. எல்லை வரையறை ஆணையம்
a) 1,2,3,4 b) 3,4,2,1 c) 4,3,2,1 d) 4,2,3,1

12. பூமிதான இயக்கத்தை தொடங்கியவர்
a) ராம் மனோகர் லோகியா
b) ஜெயபிரகாஷ் நாராயணன்
c) வினோபாபாவே
d) சுந்தர்லால் பகுகுணா

13. கீழ்க்கண்ட போப்பாண்டவர்களில் இத்தாலிய மறுமலர்ச்சிக்கு ஆதரவாக செயல்படாதவர் யார்?
a) ஐந்தாம் நிக்கோலஸ் b) இரண்டாம் ஜூலியஸ் c) இரண்டாம் பயஸ் d) மூன்றாம் பால்

14. கூற்று : காகிதம் கி.மு. பொ.ஆ.மு. இரண்டாம் நூற்றாண்டில் சீனாவில் தோன்றியது.
காரணம் : நகரும் அமைப்பிலான அச்சு இயந்திரத்தை ஜெர்மனி கண்டுபிடித்தது.
a) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றை விளக்குகிறது
b) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை
c) கூற்று சரி, காரணம் தவறு
d) கூற்று தவறு, காரணம் சரி

15. பாஸ்டன் தேநீர் விருந்து நிகழ்வு ________ இல் நடைபெற்றது.
a) 1775 b) 1773 c) 1784 d) 1799

16. சனாசனத்துபரிதிகளின் முக்கியத்துவம் பெற்ற செய்தித்தாள் ________ ஆகும்.
a) ஏழை மனிதனின் பாதுகாவலன்
b) பட்டயம்
c) வடக்கத்திய நட்சத்திரம்
d) இல் ரிஜிசார்துமெண்டோ

17. 1879 ஆம் ஆண்டில் ________ கட்டண சட்டத்தை இயற்றியது.
a) ஜெர்மனி b) பிரான்ஸ் c) பிரிட்டன் d) அமெரிக்க ஐக்கிய நாடு

18. பேர்ல் துறைமுகத்தை ஜப்பான் தாக்குவதற்கு திட்டம் வகுத்தவர் ________ ஆவார்.
a) யாமமோடோ b) ஸ்கூஸ்னிக் c) இரண்டாம் கெய்சர் வில்லியம்ஸ் d) ஹிரோஹிடோ

19. பனிப்போர் எனும் சொல்லை உருவாக்கியவர்
a) பெர்னாட் பருச் b) ஜார்ஜ் ஆர்வெல் c) ஜார்ஜ் கென்னன் d) சர்ச்சில்

20. சோவியத் யூனியன் ________ இல் சிதறுண்டது.
a) நவம்பர் 17 1991 b) டிசம்பர் 8 1991 c) மே 1 1991 d) அக்டோபர் 17 1991

## பகுதி - II

**II. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி:** *(வினா எண் 30 கட்டாய வினா)* 7 x 2 = 14

21. தேசியம் என்றால் என்ன?
22. இல்பர்ட் மசோதாவின் முக்கியத்துவத்தை விவாதி.
23. மிதவாத தேசியவாதிகளின் இறைஞ்சுதல் கொள்கை என்றால் என்ன?
24. 1915 ஆம் ஆண்டு இந்திய பாதுகாப்புக்கான சட்டம் பற்றி விவாதிக்கவும்.
25. பகிஷ்கிரித் ஹிதகாரிணி சபா குறித்து எழுதுக.
26. பூமிதான இயக்கம் பற்றி எழுதுக.
27. 1493 ஆம் ஆண்டின் போப்பின் ஆணை பற்றி நீவிர் அறிவதென்ன?
28. டிரென்ட் சபையின் பணி என்ன என்று எடுத்துரைக்கவும்.
29. பாஸ்டன் தேநீர் விருந்து பற்றி நீவிர் அறிவதென்ன?
30. சாரடோகா போரின் முக்கியத்துவம் குறிப்பிடுக.

## பகுதி - III

**III. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி:** *(வினா எண். 40 கட்டாய வினா)* 7 x 3 = 21

31. மெக்காலேயின் இந்தியக் கல்வி குறித்த குறிப்புகளை ஆய்க.
32. பிரிட்டிஷ் இந்தியாவில் தேசிய உணர்வினை உருவாக்கியதில் பத்திரிக்கைகளின் பங்கினை எழுதுக.
33. 1908 இல் நடைபெற்ற கோரல் நூற்பாலை வேலை நிறுத்தம் பற்றி நீவிர் அறிவது யாது?
34. அலிபூர் வெடிகுண்டு வழக்கின் முக்கியத்துவம் குறித்து எழுதுக.
35. கலெக்டர் ஆஷ் ஏன் வாஞ்சிநாதனால் கொல்லப்பட்டார்?
36. இந்தியாவில் பசுமைப்புரட்சியின் விளைவுகள் யாவை?
37. மறுமலர்ச்சியின் தாயகமாக இத்தாலி விளங்கியது ஏன்?
38. 1492 இல் கொலம்பஸ் மேற்கொண்ட பயணம் பற்றி குறிப்பு எழுதுக.
39. அமெரிக்க புரட்சியின் முக்கியத்துவத்தை பகுப்பாய்வு செய்க.
40. செப்டம்பர் படுகொலைகள் எதனால் ஏற்படுத்தப்பட்டது?

## பகுதி - IV

**IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளி:** 7 x 5 = 35

41. a) பிரிட்டிஷ் இந்தியாவில் தேசிய உணர்வு தோன்ற காரணமான சமூக-பொருளாதாரக் காரணிகளை ஆய்க.

*(அல்லது)*

b) இந்திய தேசிய இயக்கத்தில் லால் பால் பால் ஆகிய மூவரின் பங்களிப்பினை மதிப்பிடுக.

42. a) இந்திய விடுதலைப் போரில் மகாத்மா காந்தியடிகளின் பங்கினை மதிப்பிடுக.

*(அல்லது)*

b) டாக்டர் அம்பேத்கரின் கல்விப் பணி குறித்து, குறிப்பாக ஒடுக்கப்பட்ட மக்களின் சமூக நீதிக்காக அவரின் செயலாக்கத்தை முதன்மைப்படுத்தி விளக்குக.

43. a) வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போக்கினை விவாதிக்கவும்.

*(அல்லது)*

b) இந்திய விடுதலை இயக்க வரலாற்றில் கப்பற்படை கலகம் ஒரு சிறப்பான அத்தியாயம் என ஏன் கருதப்படுகிறது?

44. a) சுதந்திர இந்தியாவில் ஏற்பட்ட கல்வி முன்னேற்றம் குறித்து மதிப்பிடுக.

*(அல்லது)*

b) இந்திய விடுதலைக்குப் பின் ஏற்பட்ட அறிவியல் ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்கள் வளர்ச்சி குறித்து ஆய்க.

45. a) பிராட்டஸ்டன்ட் சீர்திருத்த இயக்கத்துக்கான காரணங்கள் யாவை? ஜெர்மனியில் மார்டின் லூதர் இந்த இயக்கத்தை எவ்வாறு ஒருங்கிணைத்தார்?

*(அல்லது)*

b) அமெரிக்க விடுதலைப் போருக்கான காரணங்கள் அதன் போக்கு விளைவுகள் குறித்து விவாதிக்கவும்.

46. a) முதல் உலகப்போரின் காரணங்களையும், விளைவுகளையும் கணக்கிடுக.

*(அல்லது)*

b) சீனாவில் பொதுவுடமை அரசு உருவாக மா-சே-துங்கின் பங்களிப்பை விவரித்து எழுதுக.

47. a) இந்திய தேசிய இயக்கத்தின் முக்கிய நிகழ்வுகள் ஏதேனும் ஐந்தினை காலக்கோட்டில் குறிக்கவும்.

*(அல்லது)*

b) கொடுக்கப்பட்ட இந்திய வரைபடத்தில் பின்வரும் இடங்களைக் குறிக்கவும்:

i) மீரட் ii) சௌரி சௌரா iii) தண்டி iv) வேதாரண்யம்

v) ஜான்சி

******